RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s513

# தனித்தமிழ் வளர்ச்சியில் பாவணரும் பாவேந்தரும்

**சி. அங்கயற்கண்ணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Pavanar And Pavendar In the Development of Tanittamil

**C. Angayarkanni** [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: angayarkannicnc@gmail.com

Received: 03-08-2021
Revised: 28-04-2022
Accepted: 03-05-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

The task of the Tanittamil movement is to write or speak in Tanittamil without mixing other language words in Tamil. Tamil language is naturally unique. The Tanitha Tamil Movement is a movement that was launched in anticipation of the Tamil language in a context where Sanskrit words are also widely used in the Tamil language of Manipravala or Manipavala. The movement originated in 1916. Devanayapavanar, Maraimalayadikal, Bharathidasan, Perunchithranar and Parithimarakalaignar are notable in the separate Tamil movement. Tamil is a language with a lot of vocabulary. The aim of the Tanittamil movement is to show that this language has the power to express any idea with its resources.

**Keywords:** Rational, Tamil, Individual Tamil, Close Belief, Tamil Sense, Antiquity, Tamil Art, Tamil Heritage, Culture, Civilization, Art

## முன்னுரை

தனித்தமிழ் வளர்ச்சியில் பாவாணரும், திராவிட எழுச்சியில் பாவேந்தரும் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழின் வளம், செம்மை குறித்த இவர்கள் தம் கருத்துகளும் சான்றாதாரங்களும் இன்னும் ஆண்டுகளுக்குத் தேவைப்படும் கருத்துகளாகும். தமிழின் தொன்மை குறித்த பாவாணரின் ஆய்வுகள் வெளிவராத பல்வேறு புதிய புதிய கருத்துக்களையும், ஆய்வு முடிவுகளையும் நமக்கு எடுத்துக் காட்டின. மேலும், தமிழ் சொல்லாராய்ச்சிகள் இன்றும் ஆய்வாளர்களுக்கும் தொடர்ச்சியான ஆய்வுகளுக்கும் பயன்பட்டு வருகின்றன.

புதிய சொற்களை தமது கவிதைகளில் கையாண்டு கவிதை யாத்தவர் பாவேந்தர். பகுத்தறிவு, தமிழ், தமிழ்நாடு, தமிழினம் என்றும் பல்துறை நோக்கோடு தமிழகத்தில் கவித்துவம் படைத்தவர். தமிழக வரலாற்றில் இருவரின் பங்கு மகத்தானது.

## பாவாணர்

ஆரியர் வருமுன் தமிழ் இயற்கையாக எப்படி வழங்கினதோ அப்படி வழங்குவதே தனித்தமிழ். மேலும் தமிழர் தம் கருத்தைத் தெரிவிக்க வேண்டிய சொற்களெல்லாம் ஏற்கனவே தமிழில் அமைந்துள்ளன. புதுக்கருத்துகளைத் தெரிவிக்கக் கூடிய புதுச் சொற்களைப் புனைந்து கொள்வதற்கும் தேவையான கருவிச் சொற்களும் கருச் சொற்களும் அதில் உள்ளன.

எனவே வேறு எந்த மொழியின் துணையில்லாமலும் தனித்து இயங்கும் வல்லண்மைத் தமிழுக்கு உண்டு என்கிறார் பாவாணர்.

மறைமலையடிகளை வழிகாட்டியாகக் கொண்ட பாவாணர் அடிகளின் தனித்தமிழ் ஈடுபாட்டால் ஈர்க்கப்பட்டார் எனலாம். அவரைத் தொடர்ந்து தனித்தமிழ்ப் பாணியில் பாவாணர் ஆர்வமாகக் களமிறங்கினார்.

பாவாணரின் தலைமையில் பெருஞ்சித்திரனார் முன்னின்று செயற்படுத்தினார். இதன் விளைவாக 1968-ல் தொடங்கப் பெற்ற உலகத் தமிழ்க் கழகம் 1969 திசம்பரில் பறம்புக் குடியில் தனது முதல் மாநாட்டை நடத்திக் காட்டியது. மறைமலையடிகள் காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கால்கோள்விட்டத் தனித்தமிழ் இயக்கம் பாவாணர் காலத்தில் தமிழகம், புதுவை போன்ற மாநிலங்களிலும் பரவி பல்வேறு கிளைகளைக் கொண்டு விளங்கியது.

1970 -இல் மதுரையிலும் பின்னர் தஞ்சாவூர், சென்னை போன்ற இடங்களிலும் மாநாடுகள் நடத்தப்பட்டன. இவ்வாறு மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழியக்கம் நாளடைவில் மிகப்பெரிய அளவில் உலகத் தமிழ்க் கழகம் என்ற பெயரில் முறையானதோர் அமைப்பாக உருவாக்கம் பெற்றது.

## நோக்கங்கள்

உலகத் தமிழ்க் கழகம் பல்வேறுக் கோட்பாடுகள் மற்றும் குறிக்கோள்களுடன் உலா வரத் தொடங்கியது.

சாதி மதச் சார்பின்றியும் தன்னல வணிக விளம்பர நோக்கமின்றியும், குமரி நாட்டு மரபைத் தழுவியும் அடிகள் பயன் வழிகாட்டிய வழியைக் கடைப்பிடித்தும் எல்லாத் துறைகளிலும் தமிழைத் தூய்மையாக வளர்க்க வேண்டுமென்ற அவாவுடன் நடை பயின்றது. மேலும் தனித்தமிழை மேலும் பரவலாக்கப் பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1 மேலைநாட்டு அறிவியல் தொடர்பான அனைத்தையும் தூய தமிழ் பெயர்ப்பது.
2 தனித்தமிழ் நூல் எழுதுவோரையும், இதழ்கள் நடத்துவோரையும் பொருளுதவி, பரிசளிப்பு போன்றவை மூலம் ஊக்குவிப்பது.
3 தமிழ்நாட்டில் ஆட்பெயர், இடப்பெயர், கட்டடப் பெயர் ஆகியவற்றை இயன்றவரை தூய தமிழ்ச் சொற்களாக அமைப்பது.
4 தமிழுக்குக் கேடுவிளைவிக்கும் அனைத்து நிலைகளையும் அறவே களைவது போன்ற பல்வேறு நோக்கங்களுக்காகத் தமிழ்க் கழகம் செயலாற்றியது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தமிழறிஞர் பலர் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். எனினும் தனித் தமிழியக்கத் தலைவர்களாக மதிக்கப் பெறுபவர்கள் மறைமலையடிகள், பாவாணர் ஆகிய இருவரேயாவர்.

தமிழின் தொன்மையை உலகறிய வைத்தவர் கால்டுவெல் பெருமகனார் தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர். செடியாகத் தழையச் செய்தவர் நிறைதமிழ்மலையாம் மறைமலையடிகளார் நான் மரமாக வளர்த்து வருகிறேன் என்று தன்னிலை விளக்கமாகத் தம் பங்களிப்பு குறித்தும் பாவாணர் கூறியுள்ளார்.

தனித்தமிழ் என்பது தமிழ்மொழி, இலக்கியம் ஆகியவற்றை மட்டும் வளர்ப்பதற்கு எழுந்ததன்று. தமிழர் கலை, வாழ்வு, சமயம், அரசியல், பண்பாடு, நாகரிகம், தமிழர் மரபு ஆகிய எல்லாவற்றையும் சார்ந்து நின்று பல்வேறு நலன்களைப் பயக்கும் மிகப்பரிய இயக்கமாகும். இந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பேற்ற பாவாணர் சொல்லாய்வு அறிஞர், பன்மொழிப் புலமை வாய்ந்தவர். மறைமலையடிகளுக்குப் பின் இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தி வந்தவர். இவர் தமிழைத் திராவிடத் தாயாகவும் உலகறியச் செய்து அதை வடமொழிப் பிணிப்பின்றி அடியோடு மீட்பதே தன் குறிக்கோள்களாக வாழ்ந்தவராவார்.

மறைமலையடிகள் சிவனியத்தை வளர்க்கவும் பரப்பவும், பொது நிலைக் கழகம் அமைத்தார். அவரது நூல்கள் பல சிவனின் கோட்பாட்டு நூல்களாகவே உள்ளன. ஆனால் பாவாணர் கிறித்துவர்,

இளமையில் கிறிஸ்தவக் கீர்த்தனம் எழுதியவர். ஆனால் கிறித்தவம் பரப்பலைத் தம் கடமையாகக் கொண்டாரில்லை. பாவாணரின் பணிகள் முழுவதையும் தமிழ் மீட்பிற்காகவும், ஆய்விற்காகவுமாகவே அமைத்துக் கொண்டார். தம் மக்களுக்குச் சமயச் சார்பில்லாதத் தனித்தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார். தமிழ் மொழி கெட்டதற்குக் காரணமே சமயம் தான் எனக் கருதியவர் பாவாணர்.

தமிழென ஒன்றும் தனித்தமிழ் என்றும்

தானிரு மொழியில்லை

தமிழது தானே தனித்தமிழாகும்

தவிர்த்திடின் பிற சொல்லை

என்ற பாவாணர் தம் நூல்களில் பெரும்பாலனவை அவர்தம் குறிக்கோளான தமிழ் மீட்பு நோக்கத்தில் எழுதப்பட்டன (Bharathidasan, 1968). மொழிப்பணியே முதற்பணியாய், தனித்தமிழ்த் தொண்டே தலையாயக் கடமையாய் இருந்தன. எனவே நம்முடைய தனித்தமிழ் ஆய்வு வரலாற்றில் பாவாணரையும் தனித்தமிழையும் பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகவே கருதலாம்.

## பாவேந்தர்

காலம் என்பது கவிஞனை உருவாக்குகிறது. அந்தக் கவிஞன் சமுதாய மாற்றத்தில், புதுவித மலர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்டவனாக மாறுகிறான். நாளடைவில் வாழ்வின் உயர்ந்த சிந்தனைகளையும் அதன் கோட்பாடுகளையும் உருவாக்கிச் சமுதாயத்திற்கு வழங்கும் வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்கிறான். தமிழ்நாட்டின் அடிமை நிலை தமிழின் இறக்கம், சமூகக் கொடுமை போன்ற சமுதாய இழிநிலைகளைச் சாடியும் குழந்தை மணம், பொருந்தா மணம், கைம்மை ஆகிய இன்னல்களைக் குறிப்பிட்டுத் தமது கவிதைகளின் மூலம் சமுதாயச் சீர்திருத்தம் பெற விரும்பியவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார்.

புலன் கொளுவ மனம் முகிழ்த்த

கருள் நீக்கி மலர்விக்கும் கலை

புலன் வழியே பற்றி மனச் சுருள் நீக்கி மனவளத்தை மலர்விப்பது கலை என்பார். சேக்கிழார் கவிதைக்கு அடிப்படை வாழ்க்கையைப் பற்றி முழுமையாக ஆராய்வது அழியாத உண்மையுடையதாகவும் ஆழமுள்ளதாகவும் திகழ்வது கவிதையாகும்.

1958-இல் வெளியான பாரதிதாசனின் “இளைஞர் இலக்கியம்” ஓர் ஒப்பற்ற குழந்தை இலக்கியமாகும். இந்த நூலில் தமிழ் என்னும் தலைப்பில் அமைந்த ஒன்பது பாடல்களும் வளரும் இளம் உள்ளங்களில் மொழி உணர்வைத் தூண்டுவதாக அமைந்துள்ளன. இன்றைய சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த எண்ணங்கொண்ட கவிஞர்கள் பலர் இருந்தாலும் பாவேந்தரின் இத்தகைய பணி சிறப்பானதாகும்.

தீமையான செய்கைகளைச் செய்யவும் கூடாது.

செய்வோரிடம் எப்போதும் சேரவும் கூடாது.

தீமையின் கொடுமை என்பது செய்கையில் மட்டுமல்ல செய்வோரிடமும் காணப்படும் ஒன்றென்று இளைஞர்களிடம் எச்சரிக்கிறார் (Bharathidasan, 1974).

சாலை ஓரம் நடக்க வேண்டும்

தெருவோரம் இடதுபக்கம்

செல்லும் நல்ல பிள்ளை

சாலை விதிகளை இசையுடன் பாடி குழந்தைகளின் உள்ளங்களில் பதிய வைக்கிறார் (Bharathidasan, 1974).

ஒரு நல்ல கவிஞனின் பார்வை கூர்மையானது. தமிழ்நாட்டின் எண்ணற்ற கவிஞர்களில் பகுத்தறிவுச் சிந்தனையுடன் திகழ்ந்தவர் பாவேந்தர். இயற்கையின்மீது மனிதனின் சக்தியைப் புகட்டி அதன் மூலம் ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தைக் காண நினைத்தவர் பாவேந்தர். தனது விருப்பு வெறுப்புகளையெல்லாம் இயற்கையின் மீதூற சுதந்திரமான சிந்தனையுடன் புனைந்தவர் பாவேந்தர்.

## தமிழுணர்வு

தமிழ்மொழியில் பலதுறை அறிவு நூல்களையும் நூலகத்தில் வைத்துப் போற்றுகின்ற அந்த நல்ல நாளை ஆவலுடன் எதிர்நோக்கும் பாவேந்தர் பாரதிதாசன்

பாருக்குள் எங்கும் இந்நாட்டுப் பண்டைத்

தமிழ் நூல்களையும் பயிலும் நாளெந்த நாளோ?

பல கலைகளோடு தமிழ்க் கலைகளையும்

வைத்துலகு பயன் எய்தும் நாள் எந்நாளோ?

நமது இன்பத் தமிழ்மொழியில் பல தரப்பட்ட அறிவையும் வளர்க்கும் அறிவு நூல்கள் பெருக வேண்டும் (Bharathidasan, 1975). மேலும் தமிழ்மொழியில் இயற்றப்படும் நூல்கள் பல மொழிகளுக்கும் சென்றடைய வேண்டும் எனவும்,

வணிகர்கள், புலவர்கள், விழா நடத்துவோர், திருமண வீட்டார், மாணவர்கள், நடிப்புத்துறையைச் சார்ந்தோர், ஆட்சியாளர் போன்ற அனைத்துத் துறையோரும் ஒன்றுபட்டுத் தொண்டாற்றினால் ஒழிய தமிழை நடைமுறைப்படுத்த முடியாது. தமிழுக்கு ஏற்படும் தீங்குகளை அனைத்து வகையாலும் எதிர்த்து அவரவர் தம்மால் இயன்ற அளவு தொண்டு புரியுமாறு பாவேந்தர் வேண்டுகின்றார்.

மனங்கவரும் தென்றலிலே குளிராயில்லை

தோப்பில் நிழலா இல்லை

தணிப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின்

தமிழ்த் தெருவில் தமிழ் தானில்லை!

கடவுள், மதம் இவை இரண்டும் தமிழுக்கு நோய் போன்றவை (Bharathidasan, 1975).

சாதிகளை ஒழித்துத் தமிழை மீட்க வேண்டும் என்றும், தமிழ் மொழியில் கலந்துள்ள அயல்மொழிகளை ஒழித்து மொழியை மீட்க வேண்டும் என்றும் இத்தகையச் செயல்பாடுகளை ஏற்காத தமிழர்களின் தெருக்களில் வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் நல்ல தமிழ் இல்லாத நிலை ஏற்படும் என்றும் உள்ளம் உருகிப் பேசுகின்றார் பாவேந்தர்.

தமிழனைக் கெடுக்கும் சக்திகளை, ஆட்சிகளை எதிர்க்காத தமிழன் இருப்பதைக் காட்டிலும் இறந்துபோவது நல்லது என்பதை 'இருப்பதை விட இறப்பது நன்று' என்ற தலைப்பில்,

"வாழ்வுக்கான

புகழ்ச்சினை போக்கடித்தும்

தமிழருர் வாழ்வதிலும்

இறத்தல் நன்றே"

என்று பாடியிருக்கிறார் (Bharathidasan, 1975).

பாடகர் என்ற தலைப்பில் தமிழால் இசைபாடி வடமொழி ஆதிக்கத்தை வெல்ல வேண்டும் என்பதை,

தமிழ் நாட்டுப் பாடகரே!

தமிழ்ப்பாடித் தமிழ் மானம்

காப்பீர் நன்றே!

என்பதில் தமிழாலேப் பாட முடியும் என்ற நம்பிக்கையை நிலைநாட்டி உள்ளார் (Bharathidasan, 2007).

மாணவர் என்ற தலைப்பில் வரும் கவிதையை மாணவர்கள் தமிழைக் கற்பதோடு தமிழுக்கு வரும் தடைகளை எதிர்த்துத் தமிழைக் காப்பதும் உயரியக் கடமையாக உரைத்துள்ளார். மாணவர்கள் எம்மொழியைக் கற்றாலும் அன்னை மொழியைப் போற்ற வேண்டும் என்பதை,

"ஆங்கிலத்தைக் கற்கையிலும்

அயல் மொழியைக் கற்கையிலும்

எந்த நாளும்

தீக்கனியைச் செந்தமிழைத்

தென்னாட்டின் பொன்னேட்டை

உயிராய்க் கொள்வீர்"

என்று கூறியுள்ளார் (Bharathidasan, 1975).

பாரதிதாசன் எதைப்பாடினாலும் அதில் தமிழைப் பாடாமல் இருக்க முடியாது. தமிழால்தான் தமிழ்நாடும் தமிழினமும் வாழ முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டவர்.

பல்வேறு அறப்பொருள்களைத் தாங்கி இருப்பது திருக்குறள். எந்த மனிதனையும் முன்னேற வழி காட்டுவது. அறநெறிகள் நிறைந்த வாழ்வியல் நூல். இந்த நூலுக்கு வேறு இணையான நூல் இந்த அவனியில் இல்லை. பாவேந்தர் அளவுக்கும் திருக்குறளைப் பாராட்டியோர் எவருமில்லையெனலாம். "இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே" என்ற தொடரின் மூலம் பெருமை சேர்க்கிறார்.

## பகுத்தறிவு

பெரியாரின் பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட பாவேந்தர் பெரியாரின்பால் நீங்காத பற்றும், அன்பும், மதிப்பும் வைந்திருந்தார் (Aanaimuthu, 2005). பாவேந்தருக்குப் பிறகு தோன்றிய கவிஞர்கள் ஏதேனும் கருத்தை வலியுறுத்த வேண்டுமானால் பாவேந்தர் வரிகளை மேற்கோள் காட்டுவதைப் பெருமையாகக் கருதினர். மேலும் திராவிட இயக்க வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், பாவேந்தரின் கவிதைககள் புதிய வேகத்தையும் ஊக்கத்தையும் தந்தன.

தொண்டு செய்து பழுத்த பழம்

தூயதாடி மார்பில் விழும்

மண்டைச் சுரப்பை உலகுதொழும்

மனக்குகையில் சிறுத்தை எழும்

பரந்த அறிவும், அஞ்சாத நெஞ்சமும், பொது வாழ்வில் தூய்மையும், உலகமே கண்டு வியக்கத்தக்க அறிவும் படைத்தவர் பெரியார் என்று பாவேந்தர் உரைக்கிறார் (Bharathidasan, 1984).

பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர் பாவேந்தர். அறிவுலகத்தை இருகை நீட்டி வரவேற்கும் இவர்,

கையில் கிடைத்தவற்றையெல்லாம் சுருட்டுவோர்

சொத்துகள் தனியுடைமை என்று சொல்கின்றனர்

இவர்களையெல்லாம் வெருட்டி விரட்டுவது பகுத்தறிவே

என்று விளக்கம் கூறுகிறார் (Nannan, 1996).

பச்சை விளக்காகும் - உன் பகுத்தறிவு தம்பி

பச்சை விளக்காவே - நல்ல பாதை பிடி தம்பி

இவ்வடிகள் வாழ்க்கையில் மூடநம்பிக்கையில்லாத பகுத்தறிவு நெறியை எவ்வாறு கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது (Nannan, 1996).

இன்றைய நூற்றாண்டுகளில் தமிழ்ச் சமுதாயம் சாதி, மதம், சுயநலம் தன்னம்பிக்கையின்மை போன்ற பல்வேறு கூறுகளால் இருண்ட நிலையில் உழன்று கொண்டிருப்பதைக் கண்டு வருந்தியவராகப் பாவேந்தர் நிற்கிறார்.

உருவ வழிபாடு சமயங்கள், சடங்குகள், சோதிடம் நம்பிக்கைகள், குறியீடுகள் போன்ற அனைத்தும் மூடநம்பிக்கைகளாகும். இவையனைத்தும் பகுத்தறிவுக்குத் தடையாகும்.

கடவுள் என்ற நாமதேயம்

கழறிடாத நாளிலும்

உடைமையாவும் பொதுமையாக

உலகு நன்று வாழ்ந்ததாம்

கடையர் செல்வர் என்ற தொல்லை

கடவுள் பேர் இழைத்ததே

உலகத்தில் உள்ள பொருள்கள் யாவும் பொதுமை என்ற எண்ணம் கடவுள் என்ற ஒன்று உருப்பெற்றவுடன் நாளுக்கு நாள் அழிந்து வருகின்றதைப் பாவேந்தர் நினைவூட்டுகிறார் (Nannan, 1996). மேலும் கடவுளின் பெயரால் மேல் கீழ் என்ற வேறுபாடுகள் தோன்றி விட்டதையும் எடுத்துரைக்கிறார்.

தமிழ் இலக்கியத் துறையில் பாவேந்தர் தொடாத துறைகளே இல்லை எனலாம். இயற்கை, தமிழுணர்வு திருக்குறள், பெருமை, பகுத்தறிவின் இன்றியமையாமை இறைவன் எதிர்ப்புப் பிரச்சாரம் எனப் பல்வேறு கூறுகளைத் தொட்டுக் காட்டியதோடு மட்டுமல்லாமல் சமுதாய அக்கறையுடன் பல்வேறு நிலைகளையும் எடுத்துக் கூறியுள்ளார்.

## முடிவுரை

பாவாணர் மிகச்சிறந்த தமிழ் அறிஞர். சொல்லாராய்ச்சி வல்லுஞர். மறைமலையடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆணிவேராய் இருந்து சிறப்பாக செயலாற்றினார். பாவேந்தரின் உள்ளத்தில் பிறமொழிக் கலப்பினால் தமிழ்மொழிக்குக் கேடு ஏற்படும் என்ற எண்ணமே உரம் பெற்றது. தமிழில் வடசொல் கலத்தல் வேண்டாம் என்று கருதினார். பாவேந்தர் பாட்டெல்லாம் தனித்தமிழ் காக்கும் படையாக விளங்குகிறது. பாவேந்தர் தமக்காக அன்றித் தமிழுக்காகவே வாழ்ந்தவர். தமிழ் மொழி, இனம், நாடு, பண்பாடு, தமிழர் நலம் இவைகளின் மொத்த வடிவமாக வாழ்ந்தவர் பாவேந்தர். பாரதிதாசன் தமிழ் மொழியை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் தமிழ்ப்பண்பாட்டையும் வளர்ப்பதை உயிர் மூச்சாகக் கொண்டவர். பாரதி - பாரதத்தாயை எப்படித் தன் கவிதையில் கண்டாரோ அதைப் போலவே தமிழியத்தை மானுடத்தோடு சங்கமப்படுத்துகிறார். தமிழ் தன்னை வாழ வைக்கும் தாயாகவே கவிதையில் கண்டுள்ளார். தன் கவிதை மூச்சைத் தமிழியத்திற்காகவே இயக்கியுள்ளார்.

## References

Aanaimuthu, V., (2005) Periyar – E.V.R. Sinthanaigal, Poompuhar Pathippagam, Chennai, India.

Bharathidasan, (1968) siruvar padal thirattu, Chenthamilch Kanchi, Chennai, India.

Bharathidasan, (1974) Ilaignar Ilakkkiyam, Manivaasagar Pathippagam, Chennai, India.

Bharathidasan, (1975) Tamiliyakkam, Senthamizh Nilaiyam, Pudukkottai, Chennai, India.

Bharathidasan, (1984) Isaiyamuthu, Paari Nilaiyam, Chennai, India.

Bharathidasan, (2007) Tamil Unarchigal, Naam Tamizhar Pathippagam, Chennai, India.

Nannan, M., (1996) Periyar Kanini, Gnayiru Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License